

**Crossian Resonance**

**A Multidisciplinary Research Journal** **ISSN 0976-5417**
(A refereed Biannual Published in June and December)
**Vol. 15, No.2, December 2024**
**https://research.holycrossngl.edu.in/**

# அன்பின் மொழியே மழலைமொழி

***[1]ஜெயகலா வி., [2]ஆன்றின் மேரி எஸ். & [3]ஸ்னோ ஜெ. ஷர்மிளா**
[1]நூலகர், ஹோலிகிறாஸ் கல்லூரி (தன்னாட்சி), நாகர்கோவில் - 629 004
[2]கணிதத்துறை, ஹோலிகிறாஸ் கல்லூரி (தன்னாட்சி), நாகர்கோவில் - 629 004
[3]ஆங்கிலத்துறை, ஹோலிகிறாஸ் கல்லூரி (தன்னாட்சி), நாகர்கோவில் - 629 004
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி - 627 012

**கட்டுரைச் சுருக்கம்**

*அன்பின் மொழி என்பது மழலை மொழியே. அந்த மழலை மொழியின் ஆழம் அகலம் எதையும் நம்மால் கண்டுணர முடியாது. அதை அனுபவித்து உள்ளுணர வேண்டும். அந்த மழலைமொழியை இன்ப மொழியாக்குவதும், மகிழ் மொழியாக்குவதும் வளர்ப்பவரின் கையிலேயே தான் உள்ளது. இந்த மழலைப் பருவமானது சுயநலப் பருவம், உடலின்ப பருவம், தன்னம்பிக்கையில் வளரும் பருவம், குறும்பு பருவம் என்று பலவாறு அழைக்கப்படுகிறது. இப்பருவத்தை நாம் எவ்வாறு கையாள்வது நல்லது என்பது குறித்து இக்கட்டுரையில் காண்போம்.*

## முன்னுரை

'குழல் இனிது யாழ் இனிது என்பர் தம் மக்கள் மழலைச்சொல் கேளா தவர்'

தம் மக்களின் மழலைச் சொல் கேட்டு இன்புறாதவர்களே, குழலிசை இனியது என்றும், யாழிசை இனியது என்றும் புகழ்ந்து கூறுவார்கள். அத்தகைய இனிமை வாய்ந்த மழலைப் பருவத்தில் அவர்களுக்குள் ஏற்படும் மாற்றங்கள் பலவிதம். அம் மழலைப் பருவத்தை சரியான விதத்தில் கையாண்டு வளர்த்தெடுத்தால் அவர்கள் வாழ்வு இனிமையாகும். குயவனிடம் கொடுக்கப்பட்ட களிமண்ணை குயவன் தான் விரும்பிய பாத்திரமாக வனைவது போல நம் மத்தியில் வளர்ப்பதற்கு இறை கொடுத்த மழலையைச் சரியானப் பாதையில் வளர்த்தெடுப்பது நமது கடமை.

## மனதில் எளிதில் பதியும் பருவம்

"எந்த குழந்தையும் நல்லகுழந்தை தான் மண்ணில் பிறக்கையிலே அவர் நல்லவர் ஆவதும் தீயவர் ஆவதும் அன்னை வளர்பினிலே." என்ற பாடல் வரிக்கேற்ப எல்லா குழந்தைகளும் பிறக்கையில் நல்லவராகவே பிறக்கின்னறனர். ஆனால் நல்லவராகப் பிறக்கின்ற குழந்தையை நல்ல குழந்தையாக வளர்த்தெடுப்பது நம்மவர் கையில்தான் உள்ளது.

மழலைப் பருவம் எளிதில் பதியும் பருவம். இப்பருவத்தில் நாம் குழந்தைக்கு எதைக் கற்றுக் கொடுக்கிறேமோ அல்லது குழந்தை எதைக் கற்றுக் கொள்கிறதோ அதுவே அவர்கள் வாழ்வில் தாக்கத்தை ஏற்படுத்தும். நேர்மறை எண்ணத்தோடு வளர்க்கப்படும் மழலை தன் வாழ்வின் இறுதி வரை நேர்மறை எண்ணத்தோடு வாழ்ந்து சாதனைபுரியும். ஆனால் எதிர்மறை சூழ்நிலையில் வளர்ந்தப்படும் குழந்தை வாழ்நாள் முழுவதும்

பாதிப்புக்குள்ளாகும். இந்தநிலை மாற மழலைப் பருவத்தில் நேர்மறை சூழ்நிலையை உருவாக்க வேண்டியது நமது கடமையாகும்.

**குழந்தையின் குணம்**

"குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்று
குற்றங்களை மறந்துவிடும் மனத்தால் ஒன்று."

இறைவன் நாம் எத்தனை தவறு செய்தாலும் மன்னித்து மறந்துவிடுவார். அதேப் போன்று தான் மழலைகள் மற்றவர் செய்த குற்றங்களை உடனே மறந்துவிடும் குணம் கொண்டவர்கள். மறந்து விடுவது மட்டும் அல்ல. அது அவர்களின் நினைவலைகளில் இருப்பதே இல்லை. சிறுசிறு குறும்புகளை விறுவிறுவென செய்யும் மழலை தன்னை வெறுப்பவர்களைகூட மனமாற நேசிக்கும். இதுவே மழலையின் குணம். அதுதானே இறை குணம்.

**மழலையின் சிரிப்பு**

'உறக்கத்தில் சிரித்தால் கூட கண் இமைக்காமல்
பார்க்கும் கொள்ளை அழகு, மழலையின் அழகு - அப் புன்னகையில்
முற்றும் அடங்கி போகிறது அகவலியும், புறவலியும், கோபச் சுவடும்'

ஆம், மழலை சிரிப்பு மனதின் துன்பம் மறக்கும் மருந்து மட்டுமல்ல பிரிந்த உறவுகளை இணைக்கும் பாலம். அன்பை வெளிப்படுத்தும் அருமருந்து.

**கள்ளம் கபடம் இல்லா வயது**

சூதும் வாதும் வேதனை செய்யும். இது நாம் படித்த பால பாடம். மழலை வயது கள்ளம் கபடம் இல்லா வயது. இவ்வயதையே சூது வாது தெரியாத வயது என்பர். பிறரது வாழ்வின் வளர்ச்சிக்குத் தடை செய்யும் எண்ணம் வராத வயது. குழந்தைகளைக் கண்டால் குதூகலிக்கிறோம். குழந்தைகள் சூது வாது அறியாதவர்கள். சிரிப்பாரோடு சிரித்து மகிழ்ச்சியையும், அழுவாரோடு அழுது துக்கத்தையும் ஒரு சேர வெளிப்படுத்தும் பருவம் மழலைப் பருவம். கூட்டுப் புழுவாக இருந்த புழு பட்டாம் éச்சியாக சிறகடித்துப் பறக்கும் போது எந்த ஒரு மகிழ்ச்சி அடையுமோ அந்த மகிழ்ச்சி அடையும் பருவம்தான் மழலை பருவம். அந்த மழலைக்குச் சிறகடித்து பறக்க மட்டுமே ஆசையாக இருக்கும். முடங்கி கிடக்க தோன்றாது. எப்போதும் சுறுசுறுப்பாக இயங்கி கொண்டே இருக்கும். எதற்கெடுத்தாலும் தானும் மகிழ்ந்து பிறரையும் மகிழ வைக்கும் உன்னத பருவம். இதைத் தான் இவ்வாறு கூறுகிறோம்.

குழலிசையும், யாழிசையும்
தோற்றுப் போயின – உன்
நஞ்சில்லா நன் மொழியால்!

உடல் வளர்ச்சி குறைந்த வேகத்தில் அமைந்தாலும், கற்றுக் கொள்ளும் ஆர்வத்தோடு மன உறுதியுடன், இளம் கன்று பயம் அறியா என்பதற்கிணங்க பயம் அறியாமல் பட்டாம் éச்சியாய் சிறகடித்து தன் உணர்வுகளை உடனுக்குடன் வெளிப்படுத்தும் பருவம் துடிப்பாய் துணிந்து செய்யும் பருவம் தான் மழலைப் பருவம்.

'பச்சை மரத்தில் அடிக்கும் ஆணியாய் பளிச்சென பதியும் சின்னப் பருவம்

பெற்றோர் உற்றார் அமையும் விதத்தில் வளர்ந்து வரும் பேதைப் பருவம்'

**மழலையின் வெற்றிக்குப் பங்களிக்கும் காரணிகள்**

1. **பெற்றோரின் ஊக்கமும், ஆதரவும்.**

மழலை சரியாக செய்யும் செயலை ஊக்கப்படுத்தினாலே மகிழ்வோடு வளரும். எந்தக் கடினமான செயலை முயற்சித்தாலும் தன்னோடுகூட பெற்றோர் இருக்கிறாரே என்ற ஆதரவு அக் குழந்தை பயம் நீங்கி தன்னம்பிக்கையோடு, சுதந்திரமாக வாழ வழி வகுக்கிறது. குழந்தைகளைத் தவறு செய்ய அனுமதிப்பது, அவைகளிடமிருந்து குழந்தைக்குத் தவறைச் சரி செய்யும் குணத்தைக் கற்றுக் கொடுப்பது பாதுகாப்பான எல்லைக்குள் அவர்களின் சுற்றுப்புறங்களை ஆராய அனுமதிப்பது, அவமான உணர்வை வளர்க்காமல் தானாக இயங்கும் உணர்வை வளர்க்க உதவி செய்கிறது. எல்லா நிலைகளிலும் மழலையிடம் பொறுமையோடு காரணங்களை விளக்கினால் புரிந்து கொண்டு பொறுப்புணர்வோடு வளர்வார்கள்.

கருவிலிருந்து குழந்தைகளின் அனைத்து பருவத்திலும் உடனிருந்து, நல்ல உறுதுணையாய் இருப்பவர்கள் பெற்றோர், பண்படுத்திய நிலத்தில் தேர்ந்த பயிர் விளைவது போல் குழந்தைகளின் மனதில் பெற்றோர் நல்ல பகிர்வுகளை உருவாக்கினால் எதிர்காலத்தில் அவர்களிடம் நல்ல விளைவுகள் உருவாகும். இளமையில் கற்றுக் கொடுப்பது உளவியல் ரீதியாக குழந்தைகளின் மனதில் நல்ல பதிவை உருவாக்கும்.

2. **பகிர்வும் பங்களிப்பும்**

குழந்தைகளின் முதல் பகிர்வு தாயின் கருவறையிலேயே தொடங்குகிறது. இரண்டாவது பகிர்வு குழந்தை பிறப்பிலிருந்து வாழ்நாள் முழுவதும் தொடர்கிறது. பெற்றோரின் பங்களிப்பே குழந்தைகளின் ஆதார நாதம். ஏனெனில் குழந்தைகளின் பன்முக வளர்ச்சி பெற்றோரிடமிருந்து பெறப்படுகிறது. கருத்துச் செறிவான தாலாட்டுப் பாடலில் துவங்கி பண்பாடு, கலாச்சாரம், நீதி, வீரம் என அனைத்தையும் வெளிப்படுத்தும் கதைகள், குழந்தைகளின் விளையாட்டு, வீட்டு வேலையில் பகிர்வு என அனைத்துச் செயல்களிலும் பெற்றோர்கள் மற்றும் பெரியவர்கள் தங்களுடைய பகிர்வையும், பங்களிப்பையும் குழந்தைகளுக்கு அளித்தனர். அதனால் குழந்தைகள் உளவியல் ரீதியாக உடல்நலத்தோடு, மனப்பலத்தையும் பெற்றனர். இன்று காலச் சூழலால் கூட்டுக் குடும்பம் மாறி தனித்து வாழும் குடும்பம் உருவாகியுள்ளது. அன்பையும், பண்பையும், பணிவையும், அரவணைப்பையும் கற்றுக் கொடுத்த கூட்டுக் குடும்பம் குறைந்து விட்டதால் பெற்றோரின் அதிகமான பகிர்வு இன்றைய குழந்தைகளுக்குத் தேவைப்படுகிறது.

**குழந்தைகளின் உளவியல் பிரச்சனைகள்**

மழலை குழந்தைகளுக்கு உளவியல் ரீதியாகப பல பிரச்சனைகள் ஏற்படுகின்றன. அக் காரணிகள் அவர்கள் வாழ்வின் வளர்ச்சியை பாதிப்படைய செய்கிறது. தொடர் தோல்விகளால் ஏற்படும் மன அழுத்தம், அதற்காக தண்டிக்கப் பட்டால் அவமான உணர்வு, மழலையின் விருப்பத்தை பெற்றோர் அல்லது பெரியவர்கள் நிராகரித்தல், பிறரின் எதிர்மறையான விமர்சனங்கள், மழலைகளின் மனதைப் பாதித்து அது அவர்களின் வாழ்வின் வளர்ச்சிக்குப் பிரச்சனையாக உருவெடுக்கிறது.

**தேவையும் நிராகரிப்பும்**

இன்றைய சூழலில் பெண்களும் வேலைக்குச் செல்வதால் உறவுகளைச் சந்திக்கும் நேரம் குறைந்து விட்டது. கிடைக்கும் நேரத்தில் கணினி, அலைபேசி, தொலைக்காட்சியுடன் நேரம் செலவிடப்படுகிறது. காலத்தே செய்யாத காரியத்தால் எந்தப் பயனும் இல்லை. கிடைக்கும் நேரத்தில் குழந்தைகளின் மனநிலை அறிந்து தகுந்த நேரத்தில் பகிர்வையும், பங்களிப்பையும் கொடுத்தால் பாதுகாப்பான சூழல் உருவாகும். குழந்தைகளை உருவாக்கும் போது தேவையானதைக் கொடுத்து தேவையற்றவைகளை நிராகரிக்கக் கற்றுக் கொண்டால் எதிர்காலத்தில் மாற்றங்களால் ஏற்படும் ஏமாற்றங்களை எதிர்கொள்வதற்குப் பக்குவப்படுவார்கள்.

**வெறுப்புணர்வு**

மழலைக் குழந்தை வெறுப்புணர்விற்கு ஆளாவது முதல் குழந்தை இருக்கும்போது இரண்டாவது பிரசவத்திற்குத் தாய் தயார் ஆவது, முதல் மனைவி இருக்கும்போது இரண்டாவது மனைவியைத் திருமணம் செய்ய ஒரு கணவன் முயற்சி செய்வது போன்றது. அச்செயல் முதல் மனைவியின் மனதில் என்ன உணர்வுகளைத் தோற்றுவிக்குமோ அதே உணர்வுகளை முதல் குழந்தையின் மனதில் தோற்றுவிக்கும். தனக்கு இருக்கும் முக்கியத்துவம் பறிபோவதை எந்தக் குழந்தையும் விரும்புவதில்லை. அதே நேரத்தில் புதியக் குழந்தையைக் கவனிக்கும் விசயத்தில் காட்டும் அக்கறையை முதல் குழந்தையையும் கவனிக்கும் நேரத்தில் பெற்றோர்களும், வீட்டில் உள்ள மற்றவர்களும் உறவினர்களும் காட்டுவதில்லை. இதனைக் கவனிக்கும் முதல் குழந்தை இதுவரை எனக்கு முழுமையாக கிடத்து வந்த கவனிப்பைப் பறித்துக் கொண்டது புதிதாக வந்தக் குழந்தை தானே என நினைத்து அக்குழந்தையின் மீது வெறுப்பையும் பொறாமையையும் வளர்த்துக் கொள்கிறது.

நல்லுறவு நீடிக்கும்

பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை சமமாக நடத்தும் போது குழந்தைகளிடையே சகோதர பாசம் அதிகரித்து நல்லுறவு நீடிக்கும். உடன் பிறந்தோரிடம் நிலவும் இந்நல்லுறவு இரு குழந்தைகளின் மொழி வளர்ச்சி, அறிவு வளர்ச்சி ஆகியவற்றிற்கு துணை நிற்கும். அன்பு பாசம் ஆகியவற்றின் ஆதாரமாக அமையும். விளையாட்டு, நகைச்சுவையுணர்வு ஆகியவற்றை வளர்க்க உதவும்.

**முடிவுரை**

அன்பு மொழிப் பேசும் மழலையைக் கையாளும் விதத்தை அறிந்த நாம் எதையும் எளிதில் புரிந்து, எளிதில் மறந்து, அனைவரையும் கவர்ந்து, உறவை இணைத்து, தன் புன்சிரிப்பால் எல்லோரையும் மயங்கவைக்கும் மழலையைப் பாசத்தோடு, கரிசனையோடு, உறவோடு வாழ வைப்போம். அதுவே அவர்களின் சிறந்த எதிர் காலத்துக்கும், தன்னம்பிக்கையான வளர்ச்சிக்கும் வழிவகுக்கும். நேர்மறை எண்ணங்களை வளர செய்து, எப்போதும் மகிழ்ச்சியாய் இருந்து பிறரையும் மகிழ்விக்க பழக்குவோம்.

**துணை நூற்பட்டியல்**

1. (https://www.vinavu.com/2019/02/20how-tolovechildren-part-01/-. Accessed on 10-04-2020).

2. Barber L.W., Child Development in Iris V. Cully and Kenbg Brubaker Cully and Kendig Brubaker Cully, Harper's Encyclopedia of Religious Education (San Francisco: Jarper & Row; 1990)
3. Hurlock, E.B., Development of Psychology. A Life-Span Approach (New Delhi: Tata McGraw- Hill Edition; 1999, 22nd reprint)
4. Piaget, Jean, Science of Education and the Psychology of the Child (New York: Orion Press, 1070).